**செய்தி வெளியீடு எண்: 652** **நாள்: 03.10.2017**

**பத்திரிக்கைச் செய்தி**

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை – 106.**

2017 – 2018 ஆம் கல்வியாண்டிற்குரிய பி.எஸ்.எம்.எஸ் / பி.ஏ.எம்.எஸ் / பி.என்.ஒய்.எஸ் / பி.எச்.எம்.எஸ் / பி.யு.எம்.எஸ் மருத்துவ பட்டபடிப்பிற்களுக்கான சேர்க்கைக்கான முதல் கட்ட ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வு சென்னை, அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலுள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் கீழ்க்கண்ட கலந்தாய்வு அட்டவணைப்படி நடைபெறும். தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு முறையே **தரவரிசை எண் 3525** வரை ; **கட் ஆப் மதிப்பெண் 170.00 வரை** தனித்தனியே கலந்தாய்வு **தகவல் குறுஞ்செய்தி / அழைப்புக்கடிதம்** அனுப்பப்படும். மேற்படி தகவல் / அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறாதோர், வலைதளம் “www.tnhealth.org” –ல் தங்களது விண்ணப்ப பதிவு எண் (A.R.No.) மற்றும் பிறந்த தேதியினைக் குறிப்பிட்டு தங்களுக்குரிய தகவல் / அழைப்புக்கடிதத்தை 06.10.2017 காலை 11 மணி முதல் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். மேலும், விண்ணப்பதாரர்கள் அவரவர்குரிய கட் ஆப் மதிப்பெண்ணுக்கு ஏற்றவாறு உரிய முதல் கட்ட கலந்தாய்வு நாளில் தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களுடனும் அல்லது தற்சமயம் படித்து வரும் கல்லூரியிலிருந்து பெற்ற ஆளறிச்சான்றிதழுடனும் (Bonafide Certificate) , தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து, 03.10.2017 – அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ , சென்னையில் மாற்றத்தக்க, “ Director of Indian Medicine and Homoeopathy, Chennai–106 ” என்ற பெயரில், கல்வி கட்டணத்திற்காக (Tuition fees) ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் கலந்தாய்வு கட்டணத்திற்காக ( Counselling fees) ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) ஆக இரண்டு கேட்பு வரைவோலையுடனும் கலந்து கொள்ள வேண்டும். மேலும் தரவரிசை, கலந்தாய்வு அட்டவணை மற்றும் விவரங்களுக்கு தயவு செய்து “www.tnhealth.org ” என்ற வலைதளத்தை தொடர்பு கொள்ளலாம்.

கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை,
சென்னை – 106.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

**பட்டப்படிப்பு சேர்க்கைக்கான முதல் கட்ட ஒற்றை சாளர கலந்தாய்வு அட்டவணை**

2017-18 **கல்வியாண்டு**

11-10-2017 **முதல்** 14-10-2017 **வரை**

| **தேதி** | **கிழமை** | **முற்பகல்**<br>09.00 **மணி முதல்**<br>**வருகைபுரியும் நேரம்**<br>**காலை** 7.00 **முதல்**<br>8.00 **வரை** | **பிற்பகல்**<br>02.00 **மணி முதல்**<br>**வருகைபுரியும் நேரம்**<br>**நன்பகல்** 12.00 **முதல்**<br>1.00 **வரை** |
|---|---|---|---|
| 11-10-17 | **புதன்** | **சிறப்பு பிரிவினர் மற்றும்**<br>**தரவரிசை எண்** :<br>01 **முதல்** 201 **வரை**<br>கட் –ஆப் மதிப்பெண்<br>198.50 **முதல்** 195.25 **வரை** | **தரவரிசை எண்** :<br>202 **முதல்** 520 **வரை**<br>கட் –ஆப் மதிப்பெண்:<br>195.00 **முதல்** 192.50 **வரை** |
| 12-10-17 | **வியாழன்** | **தரவரிசை எண்** :<br>521 **முதல்** 1014 **வரை**<br>கட் –ஆப் மதிப்பெண்:<br>192.25 **முதல்** 188.75 **வரை** | **தரவரிசை எண்** :<br>1015 **முதல்** 1537 **வரை**<br>கட் –ஆப் மதிப்பெண்:<br>188.50 **முதல்** 185.00 **வரை** |
| 13-10-17 | **வெள்ளி** | **தரவரிசை எண்** :<br>1538 **முதல்** 2025 **வரை**<br>கட் –ஆப் மதிப்பெண்:<br>184.75 **முதல்** 181.25 **வரை** | **தரவரிசை எண்** :<br>2026 **முதல்** 2519 **வரை**<br>கட் –ஆப் மதிப்பெண்:<br>181.00 **முதல்** 177.75 **வரை** |
| 14-10-17 | **சனி** | **தரவரிசை எண்**:<br>2520 **முதல்** 3024 **வரை**<br>கட் –ஆப் மதிப்பெண்:<br>177.50 **முதல்** 173.75 **வரை** | **தரவரிசை எண்**:<br>3025 **முதல்** 3525 **வரை**<br>கட் –ஆப் மதிப்பெண்:<br>173.50 **முதல்** 170.00 **வரை** |

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**